**சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் - 2017**

---

சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (‘‘கம்பனி’’) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

-------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 விடயத்தின் மீதான அழுத்தம்

-------------------------------------------------------

எனது அபிப்பிராயத்தை முனைப்பழிசெய்யாது, நிதிக்கூற்றுக்களுக்கான பின்வரும் குறிப்புக்களுக்கு எனது கவனத்தை செலுத்தியுள்ளேன்.

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களின் 2.5 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு, கிரான்ட் ஹயாட் கொழும்புவின் விற்பனைக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் (அமைச்சரவைத் தீர்மானம் 17/1613/733/029) 2017 ஆகஸ்ட் 01 இல் அளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களினை விட ரூபா 471,653,072 இனால் மிகைத்திருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுக்கான 20 ஆம் குறிப்பின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதனச் செலவினத்திற்கான அர்ப்பணிப்புத் தொகை ரூபா 25,887,629,779 ஆகக் காணப்படுகின்றது. மேலும், பொருளாதார முகாமைத்துவத்தின் அமைச்சரவைக் குழு 2018 சனவரி 10 இல் இணைப்பு கடனொன்றை பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தியிருந்ததுடன் அதற்கமைய, தற்போதைய கடன்கொடுத்துத் தீர்க்கும் வல்லமை அற்றதன்மையினை இல்லாதொழிக்க ஐ.அ.டொலர் 45.3 மில்லியன் கடனொன்றைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் கம்பனி காணப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களிலுள்ள 21 ஆம் குறிப்பு நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பில் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. மேற்குறித்த குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு, 2015 சனவரி 07 இல் அளிக்கப்பட்டு (ஒப்பந்தப் பெறுமதி யூரோ 28,869,372) 2015 மார்ச் 27 இல் இரத்துச்செய்யப்பட்ட உட்பகுதி அலங்கார ஒப்பந்தத்திற்காக இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பா (இத்தாலி) இனால் கம்பனிக்கு எதிராக நடுவர் தீர்ப்பு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் செய்துமுடிக்கப்பட்ட வேலை மற்றும் ஒப்பந்த நிறைவேற்றல் தொடர்பில் ஏற்பட்ட இலாப இலாப்பிற்காக யூரோ 20,552,242 கோரியிருந்தது. மேலும், நடுவர்தீர்ப்பு செயன்முறை தொடர்பில் ஏற்பட்ட கிரயம்கூட மீளளிப்புச்செய்வதற்கு கோரப்பட்டது. 2017 செப்தெம்பர் 29 இல், உரிமை கோரியவர்களுக்கு யூரோ 7,432,062.79 தொகையொன்றை அளிக்க நடுவர்தீர்ப்பு அறிவுறுத்தியிருந்தது. எவ்வாறாயினும், இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பாவின் கோரிக்கையினை கேட்பதற்கு அல்லது தீர்மானிப்பதற்கு நடுவர்தீர்ப்புக்கு எவ்வித சட்ட அதிகாரமும் இல்லை என்ற அடிப்படையில் இலங்கையில் அளிக்கப்பட்ட மேற்குறித்த வற்புறுத்தலுக்கு கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றத்தில் இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பாவினால் தாக்கல்செய்யப்பட்ட நடவடிக்கை கம்பனியின் முகாமைத்துவத்திற்கு சவாலாகக் காணப்படுகின்றது.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு**

---

கிரான்ட் ஹயாட் கொழும்புவின் விற்பனைக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் (அமைச்சரவைத் தீர்மானம் 17/1613/733/029) 2017 ஆகஸ்ட் 01 இல் அளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிநிலைமைக்கூற்று திகதியில் உள்ளவாறு விற்பனை செயன்முறையில் காணப்படுகின்றதுடன் கம்பனி விற்பனையின் நிர்வாக செயன்முறையினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தில் முதலீடுசெய்வதற்கான விருப்பத்திற்கான வெளிப்பாட்டினை கோரியிருந்தது.

2.2.2 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் இறுதி இருப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 34,922,805 பெறுமியுடைய தளத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட மூலப்பொருள் இருப்புக்களுக்காக பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.4.5 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வினை நடாத்துவதற்கு வருடாந்த பொருள் கணக்கெடுப்பு சபை நியமிக்கப்பட்டிருக்காததுடன் 2012 இலிருந்து இதுவரை மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2016 ஏப்ரல் 29 | ஊழியர்களின் PAYE வரியை அரச உரிமையைக்கொண்டுள்ள முயற்சிகள் |

| | | |
|---|---|---|
| | ஆந் திகதி பிஈடீ 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | தாங்கிக்கொள்ளக்கூடாத போதிலும், செயற்திட்ட சேவை முகாமையாளரின் சம்பளம் மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் வருகைதரு கட்டணத்துடன் தொடர்புடைய ரூபா 1,293,504 மற்றும் ரூபா 199,999 PAYE வரி ஊழியரின் வருவாயிலிருந்து கழிக்கப்பட்டிராது கம்பனியால் தாங்கிக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் (முறையாக திருத்தியமைக்கப்பட்டது) | |
| | (i) 113 ஆம் பிரிவு | சுயமாக மதிப்பிடப்பட்ட காலாண்டு வருமான வரி செலுத்துகைகள் 2017/2018 மதிப்பாண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய திகதிகளில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 120(அ) மற்றும் (ஆ) பிரிவு | 2017 ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கான PAYE வரி உரிய திகதியில் அல்லது அதற்குமுன்னர் கம்பனியால் அனுப்பப்பட்டிருக்கவில்லை. மேலும், தொழில்கொள்வோரின் PAYE வருடாந்த அறிவிப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 4(1) ஆம் பிரிவு | செயற்திட்ட சேவை முகாமையாளர்க்கு வழங்கப்பட்ட குடியிருப்பு வாடகை, நீர், மின்சாரம், தொலைபேசி, சுத்தப்படுத்தல் போன்ற செலுத்துகைகள் மற்றும் ஏனைய நலன்கள் PAYE வரியின் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படவேண்டிய போதிலும், செலுத்தவேண்டிய மாதாந்த PAYE வரி கணிப்பீட்டில் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணச் சட்டம் (விசேட ஏற்பாடு) | செயற்திட்ட சேவை முகாமையாளரின் சம்பளத்திலிருந்து முத்திரைக் கட்டணம் கழிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 42,360,162 வரிக்கு முன்னரான நட்டத்துடன் ஒப்பிடுகையில், ரூபா 15,518,955 வரிக்கு முன்னரான இலாபத்தினை விளைவித்திருந்தமையால், ரூபா 26,841,207 இனால் கம்பனியின் நிதிசார் விளைவுகளில் முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு கூட்டிணைந்த திட்டமொன்று கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின் பிரகாரம், கொழும்பில் ஹோட்டல் செயற்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு 2011 திசெம்பர் 21 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தபோதிலும், Hyatt Regency Colombo Hotel இல் முதலீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமொன்று பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 மார்ச்சிற்கு முன்னர் ஆரம்ப நிர்வாக செயன்முறை இடம்பெற்றமை தொடர்பில் சபைக் கூட்டங்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 சனவரி 20 இல் அனைத்து முன்னைய பணிப்பாளர்களும் பதவி விலகியிருந்ததுடன் 2015 பெப்ரவரி 26 இல் புதியதொரு பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, 6 நாட்களுக்கு பணிப்பாளர் சபையொன்று இன்றி கம்பனி செயற்படுத்தப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹோட்டலின் தொழிற்படு மூலதன செயலாற்றல் ரூபா 17 பில்லியனாகக் காணப்பட்டபோதிலும், ஹோட்டல் செயற்திட்டத்தின் மிகுதி பகுதியை பூர்த்திசெய்வதற்கு பற்றாக்குறையான நிதிசார் பலம் காரணமாக Grand Hyatt Colombo இனை விற்பனை செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2017 ஆகஸ்ட் 01 இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் முறையற்ற திட்டமிடல் காரணமாக, கம்பனியின் நோக்கம் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 9,600,000 பெறுமதியுடைய கம்பனிக்குச் சொந்தமான வாகனமொன்று 2015 ஏப்ரல் 30 இல் நிதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,222,000 பெறவேண்டிய வாகன வாடகை வருமானமொன்று காட்டப்பட்டிருந்தது. கம்பனியால் மாத்திரம் கைச்சாத்திடப்பட்ட ஆவணமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதிலும், தொகையின் துல்லியத்தன்மையை ஒப்பீடுசெய்வதற்காக கணக்காய்விற்கு எவ்வித செல்லுபடியான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும், 2017 மார்ச்சில் மீண்டும் கம்பனிக்கு வாகனம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூலை 10 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களினைப் பின்பற்றியிராது 2017 திசெம்பர் 06 இல் அது அகற்றப்பட்டிருந்தது.

(இ) முறையான இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை பேணப்பட்டிருக்காததுடன் கம்பனியால் காலரீதியில் பௌதீக இருப்பு மெய்மையாய்வுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த முகாமைத்துவத்தின் வினைத்திறமையின்மை காரணமாக, ரூபா 5,832,029,710 மொத்தப் பெறுமதியுடைய 15 ஒப்பந்தங்களின் காலப்பகுதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது.

(உ) உட்புற அலங்கார ஒப்பந்தம் (யூரோ 28,869,372) அளிக்கப்பட்ட இன்டேர்னா கென்ராக்ட் ஸ்பா (இத்தாலி) கம்பனி குறித்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்தமைக்காக கம்பனிக்கு எதிராக சிங்கப்பூரில் 21266/CYK/PTA ஆம் இலக்க நடுவர்தீர்ப்பு வழக்கினை ஸ்தாபித்திருந்ததுடன் செய்துமுடிக்கப்பட்ட வேலையின் கிரயம், இலாப இழப்பு மற்றும் ஒப்பந்தத்தின் நிறைவேற்றல் கிரயமாக ரூபா 3.6 பில்லியன் (யூரோ 20,552,242) கோரியிருந்தமை குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன், இலங்கையில் அளிக்கப்பட்ட மேற்குறித்த நடுவர்தீர்ப்பின் அமுலாக்கலின் நோக்கத்தினை அறிந்துகொள்ள கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு எதிராக மேற்குறித்த கம்பனியால் CHC(Civil)619/2017/ARB ஆம் இலக்க வழக்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இன் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு வழக்கு விசாரணை இதுவரை செயன்முறையில் காணப்படுகின்றது.

**5. மனிதவள முகாமைத்துவம்**

2014 ஏப்ரல் 14 இல் செயற்திட்ட சேவை முகாமையாளர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தபோதிலும், இது தொடர்பில சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிக்கூற்றுக்கள், 2018 பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 26 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடுகள்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீடு வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 6.3 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதி பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், பொது முயற்சிகளுக்கான கணக்காய்வுக்குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது தொடர்ச்சியான அடிப்படையில் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது கம்பனியால் இரண்டு கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

### 6.4 பெறுகைத் திட்டம்

அரச பெறுகை நடைமுறை 2006 இன் பிரகாரம், கம்பனியால் பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | விலைப்பட்டியல்களினை விநியோகித்தல். | விலைப்பட்டியல்களினை விநியோகிப்பதற்காக முறையானதொரு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இருப்பு முகாமைத்துவம் | இருப்புக்களினை களஞ்சியப்படுத்துவதற்கு முறையானதொரு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வங்கி இணக்கங்கள் | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பெறுகை | பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களின் பட்டியலொன்றை கம்பனி பேணியிருக்கவில்லை.<br><br>கொள்வனவு கோரிக்கைப் பத்திரங்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | செலுத்துகை உறுதிச்சீட்டுக்கள் தொடர் ஒழுங்கொன்றில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நாளேட்டுப் பதிவுகளினை பதிவிடல் | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நாளேட்டுப் பதிவுகள் கணக்கீட்டு முறைமைக்குள் பதிவிடப்படுகின்றமை. |